# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2006
# அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கம்
## Tamil Competition - Australian Society of Graduate Tamils

## தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் – 2006

அவுஸ்ரேலியாவின் நியூசவுத்வேல்ஸ், கன்பரா மாநிலங்களில் கடந்த 12 ஆண்டுகளாக நடாத்தப்பட்ட தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் 10 வது ஆண்டிலிருந்து **அவுஸ்ரேலியா பட்டதாரிகள் தமிழர் சங்கத்தின்** தலைமையின் கீழ் நடாத்தப்பட்டு வருகின்றன. 2005ல் தவிர்க்க முடியாத காரணங்களால் போட்டிகள் நடைபெறவில்லை. இப்போட்டிகள் கருப்பொருள் ஒன்றினை மையமாக வைத்தே நடாத்தப்படுகின்றன. இக்கருப்பொருள், தமிழ் மொழி, தமிழ் கலாச்சாரம் சார்ந்தனவாகவும் ஏனைய பொது விடயங்கள் சம்பந்தமானவையாகவும் இருக்கும். இந்த வருடப் போட்டிகளுக்கான கருப்பொருள், **“மண்ணின் தாகம்"** என்பதாகும். இப்போட்டிகள் பற்றிய விபரங்கள் கீழே தரபட்டுள்ளன.

இந்த தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் சிட்னியிலும் மற்றைய அவுஸ்திரேலிய மாநிலங்களிலும் நாடாத்தப்படவிருக்கின்றன என்பதை பெருமையுடன் அறித்தருகின்றோம். இம்முறை எழுத்திறிவுப் போட்டிகளை அவுஸ்திரேலிய தேசிய மட்டத்தில் நடாத்த முயற்சிகள் எடுத்துவருக்கின்றோம். அடுத்துவரும் ஆண்டுகளில் வேறு பல போட்டிகளை தேசிய மட்டத்தில் நடாத்துவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதையும் உங்களுக்கு அறியத்தருகின்றோம். மாநில மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கும் தேசிய மட்டத்தில் நடைபெறும் போட்டிகளுக்கும் வேறுவேறாக பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

### இந்தப் போட்டிகளின் பிரதான குறிக்கோள்:

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி நடத்தப்படுவதன் பிரதான குறிக்கோளானது: அவுஸ்ரேலியாவில் தமிழ்மொழியையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் பேணி வளர்ப்பதாகும்.

### நோக்கம்:

அவுஸ்ரேலியாவில் வாழ்கின்ற தமிழ் சிறார்கள் தமிழ் கற்பதை தொடர்ந்து ஊக்குவிப்பது, அவர்களிடையே தமிழ்மொழி, தமிழ்க் கலாச்சாரம் ஆகியனவற்றில் ஆர்வம், பற்று, ஈடுபாடு ஏற்படுத்துவது மற்றும் இங்குள்ள தமிழ் இளைஞர்களிடையே நல்லதொரு தலைமைத்துவத்தை உருவாக்குவது போன்றவை எமது நோக்கமாகும்.

### குறிப்புகள்:

1.எல்லாப் போட்டியாளர்களினதும் வயது 31-07-2005 அன்றுள்ளபடியே கணிக்கப்படும்.

2. ஒரு போட்டியாளர் **ஏதாவது ஒரு போட்டியில் மாத்திரமே** பங்குபற்ற முடியும். ஆனால் அனைவரும் எழுத்துப் போட்டியிலும், வினாவிடைப் போட்டியிலும்(நடாத்தப்பட்டால்), விவாதப் போட்டியிலும் குழுவாகவும் **விசேட அதியுயர் திறமை எழுத்தறிவுப் போட்டியில் தனிப்பட்ட முறையிலும்** பங்குபற்றலாம்.

3. விண்ணப்ப முடிவு திகதி: 1-05-06. எனவே உங்கள் விண்ணப்பப் படிவங்களை 1-05-06ம் திகதிக்கு முன்னே எமக்கு கிடைக்ககூடியதாக கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (Address: Tamil competitions 2006, PO Box-4040, Homebush, NSW 2140)

4. பங்குபற்றும் **ஒவ்வொரு போட்டியாளாரிடமும்** இருந்து **$5.00** கட்டணம் பெறப்படும். போட்டி நடைபெறும் தினத்தன்று நன்கொடைக் கூப்பன்கள் வாங்குவதன் மூலம் இதை நீங்கள் செலுத்தலாம்.

5. மேலதிக விபரங்கள் பெற்றுக் கொள்ளவிரும்பின், உங்கள் தமிழ்ப் பாடசாலை நிர்வாகத்தினரிடமோ: அல்லது எம்முடனே தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம். பாடல்மனனப் போட்டிக்கான பாடல்களும், பேச்சுப் போட்டிகளுக்கான கட்டுரைகளும், நேர அட்டவணையும் உரிய காலத்தில் உங்களுக்கு வழங்கப்படும்.

**தொடர்புகளுக்கு:** PO Box 4040 Homebush NSW 2140. Tele: 0433 088 725 or 02-9758 7970.
E-mail tamilcomp@yahoo.com Web: www.unifundproject.org